**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070420236114

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 12.01.2023

Accepted: 03.03.2023

Published: 01.04.2023

Citation:
Shivahaneshan, SK. "First Ethnic Violence in Colonial Sri Lanka." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 4, 2023, pp. 59–65.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6114

*Corresponding Author:
shivahaneshank@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# First Ethnic Violence in Colonial Sri Lanka

**S.K. Shivahaneshan**
*Senior Lecturer, Department of History*
*Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0009-0008-3304-2342*

**Abstract**
Sri Lanka was under the colonization of Europeans for 450 years. British ruled the country in the latter part of the colonization from 1796 to the following 152 years. Several protests were conducted by civilians against the colonial rule of Britain. Moreover, the first ethnic conflict in the country was started between Sinhalese and Muslims in Sri Lanka in 1915. This ethnic conflict laid foundation for the racial violence of the country. It is notable that several violence against minority ethnicities was carried out by the majority Sinhalese ethnicity following the first racial violence. Thus, the basis and the consequences of the first racial violence between Sinhalese and Muslims are studied.

**Key Words:** Europeans, Racial Violence, Minority, Sinhalese, Muslims, Rebellion, Colonism.

**References**

1. Mugamathu Sammim.1997. Problems of a Minority Community, Colombo.
2. Ali Ameer. 2007. The 1915 racial riots in Ceylon :A Reappraisal of its Cause Journal of South Asian Studies. 4(2) :1-20, South Asia.
3. Balckton, C.S., The action phase of the 1915 riots'., Journal of Asian Studies, Feb.1970, Vol. 29, no. 2, pp. 235-254.
4. Dep Arthur, C. 2021, Ceylon Police and Sinhala-Muslim Riots, Ratmlana
5. Edward Walter Perera. 1915. Memorandum upon recent disturbances in Ceylon, Alpha Editions.
6. Jeyawardena. K. *Economic and Political Factors in the 1915 riots*, Journal of Asian Studies, Feb.1970, Vol. 29, no. 2, pp. 223-233.
7. Keraney, R.N. *The 1915 riots in Ceylon*, Journal of Asian Studies, Feb. 1970, Vol. 29, no. 2, pp. 219-222
8. Mahavamsa, 1950, (e.d), Geigar, W., The Ceylon Information Department, Colombo
9. Ramanathan. P. 1916, Riots and martial law in Ceylon,1915, New Delhi.
10. Rutnam. J.T. '*The Rev. A.G.Fraser and the riots of 1915*', Ceylon Journal of Historical and Social Studies' , July – December, 1971,Vol.1,no.2, pp 151 -196.
11. Shamara Wettimuny. 'A brief History of anti – Muslim violence in Sri Lanka, History workshop Journal 94 (HWJ 94), 2019 July,22.
12. Tambiah, Stanley Jeyaraja. 1992, Buddhism Betrayed ?: Religion, Politics and Violence in Sri Lanka, University of Chicago Press.

# காலனித்துவ கால இலங்கையின் முதல் இன வன்முறை

*எஸ்.கே. சிவகணேசன்*
மூத்த விரிவுரையாளர், வரலாற்றுத் துறை
கலை மற்றும் கலாச்சார பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கை 1500 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரையான சுமார் 500 வருடங்களுக்கு மேலாக, ஐரோப்பியர்களின் காலணித்துவத்திற்கு உட்பட்டிருந்தது. 1796 ஆம் ஆண்டு முதல் பின்னுள்ள சுமார் 52 வருடங்கள் ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டிருந்தது. அக்காலப் பகுதியில் பொதுமக்களால் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எடுத்துக்காட்டாக 1818, 1848 ஆண்டுகளில் நடைபெற்ற சுதந்திர எழுச்சியைக்காட்டும் போராட்டங்கள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் கண்டிக் கலகம் என அழைக்கப்படும் 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சி கண்டி ஒப்பந்தத்தின் நடைமுறையினால் அதிருப்தியடைந்த சுதேசிகளால் மேற்கொள்ளப்பட்டது. 1848 ஆம் ஆண்டுக் கலகம் பெருந்தோட்ட பொருளாதார விருத்தியினால் பாதிக்கபபட்ட சுதேச விவசாயிகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இதன் பின்னர் 1915 ஆம் ஆண்டு, வரலாற்றில் கறை படிந்த சிங்கள - முஸ்லிம் கலவரம் பதிவாயிற்று. இது இலங்கையின் முதல் இனவன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வின வன்முறையே, பிற்கால இனவன்முறைகளுக்கு அடித்தளமாக அமைந்திருந்தது. இலங்கை வரலாற்றில் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடைபெற்ற, முதல் இனவன்முறைக்கான அடித்தளம், அதன் விளைவுகள் பற்றி ஆய்வு செய்யப்படுகின்றது*

***திறவுச் சொற்கள்:*** *ஐரோப்பியர், இனவன்முறை, சிறுபான்மையோர், சிங்களவர், முஸ்லிம்கள், கிளர்ச்சி, இலங்கை, காலனியாதிக்கம்.*

## அறிமுகம்

இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என பல இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களைப் பின்பற்றி வருகின்றனர். சிங்களவரும் தமிழரும் தாய்மொழியாக முறையே சிங்களம், தமிழ் மொழிகளைப் பேசுகின்றனர். இரண்டாவது சிறுபான்மையினமான இலங்கை வாழ் முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் தமிழ் மொழியைப் பேசுவது சுட்டிக்காட்டத்தக்கது. பல்லின தன்மை கொண்ட இலங்கையின் காலனித்துவ கால வரலாற்றில் **1915** ஆம் ஆண்டு (**1915.05.28**) பௌத்தர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கு இடையில் முதல் இனவன்முறை வெடித்தது. இவ்வன்முறைக்கு சமயப் பூசல்களே பிரதானக் காரணியாக அமைந்திருந்தது (Ý{ ²\Áõµ\. FC2021).

## கலகத்தின் பின்னணி

**19**ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கை பிரித்தானியர் காலனியாகக் காணப்பட்டது. **1815** ஆம் ஆண்டில் இலங்கையின் இறுதி சிங்கள இராச்சியமாக இருந்த கண்டி இராச்சியம் தலைநகர் கொழும்புடன் இணைக்கப்பட்டு, மத்திய ஆட்சி நிறுவப்பட்டது.

இதனால் அதிருப்தியடைந்த மலையக வாசிகள் ஆங்கிலேயருக்கு எதிராக ஊவா மற்றும் மாத்தளைக்கிளர்ச்சிகள் ஊடாக தமது எதிர்ப்பினை வெளிக்காட்டியிருந்தனர்.

இது ஆங்கில ஆட்சியாளர்களுக்கு பெரும் சவாலாக அமைந்திருக்கவில்லை.

1881 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலை நாட்டும் பொறுப்பினை ஆங்கிலேயர் தமதாக்கிக் கொண்டனர். 1833 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கோல்புறுக் கமறன் அரசியல் யாப்பில் திருத்தங்கள் கோரி தொடர்ச்சியாக ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராக சுதேசிகள் கிளர்ச்சிகளில் ஈடுபாடு காட்டி வந்தனர். இக்கோரிக்கை தொடர்பான செயற்பாடுகள் 1910 தொடக்கம் 1915 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. இக்காலப் பகுதியில் முதலாம் உலக யுத்தமும் தொடங்கியிருந்தது. பிரித்தானியா முக்கிய பொறுப்புடன் யுத்தத்தை முன்னெடுத்துக் கொண்டிருந்தது. பிரித்தானிய ஆட்சியாளர்கள் அகப்புற சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த காலத்தில், 1915 ஆம் ஆண்டு சிங்கள முஸ்லிம் கலவரம் முன்னெடுக்கப்பட்டது. (Tambiah, Stanley Jeyaraja 1992).

கம்பளை பிராந்தியத்தில் மரபு வழியாக, தொடர்ச்சியாக வருடந்தோறும் பெரஹரவை சிங்கள மக்கள் நடாத்தி வந்தனர். இப்பெரஹர ஊர்வலத்திற்கு கம்பளை பிரதேசத்திலிருந்த ஏனைய பள்ளிவாசல்கள் எதிர்ப்பு காட்டியிருக்காதபோதும் கம்பளை பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மட்டும் பள்ளிவாசல் சுற்றாடலில் ஊர்வலம் செல்லும்போது, சங்கு ஊதுதல் மற்றும் மேளம் அடிக்கக் கூடாது, அமைதியாகச் செல்ல வேண்டும் என கட்டுபாடுகளை விதித்திருந்தனர். அதனால் கம்பளை வாகொட விகாரை நிருவாகத்தால் 1923 ஆம் ஆண்டு பெரஹராவை நடாத்த முடியாமற்போயிற்று. இதனைத் தொடர்ந்து கம்பளை விகாராதிபதி (பஸ்நாயக்க நிலமே அலிக்வெல) மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அவ்வழக்கில் பெரஹராவை நடாத்த நீதி மன்றம் சாதகமாகத் தீர்ப்பளித்திருந்தது. ஆனால் இதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் முஸ்லிம்கள் தொடுத்த வழக்கில் பெரஹரவை பள்ளிவாசல் பிரதேசத்தில் கட்டுப்பாடுகளின்றி நடத்தத் தடைவிதித்து, நீதிபதிகளான வோல்ரர் ஷோவ் மற்றும் தோமஸ் டி சாம்பியோ ஆகியோர் தீர்ப்பளித்திருந்தனர். (HWJ 94, 2019). இந்நீதிமன்ற கட்டளையை பொருட்படுத்தாமல் பௌத்தச் சிங்களவர்களால் பெரஹர ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது. இதுவே கலகத்திற்கான உடனடி காரணமாயிற்று.

இலங்கைத்தீவைப் பொறுத்தவரையில் பௌத்தச் சிங்களவர் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கை முஸ்லிம், இந்திய முஸ்லிம் எனவகைப்பட்ட இரண்டு பிரிவினர் அப்போது காணப்பட்டனர். அவர்களுள் தென் இந்திய வம்சாவழி முஸ்லிம்கள் வர்த்தகத்தின் மூலம் பொருளீட்டிய செல்வந்தர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏகபோகவுரிமை கொண்டிருந்தனர். 1911 ஆம் ஆண்டு சனத்தொகை புள்ளிவிபரங்களின் படி, இலங்கை முஸ்லிம்கள் : 232927, இந்திய முஸ்லிம்கள் : 33527 பேரும் இலங்கையில் வாழ்ந்துள்ளனர் (E.W.Perera 1915).

இந்திய முஸ்லிம்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு பெரும் செல்வத்தை திரட்டிக் கொண்டனர். அது மட்டுமல்ல சிங்களவர் மேற்கொண்டு வந்த வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க அவர்களால் முடியவில்லை. இந்நிலை சிங்களவர்களுக்கிடையில் பொறாமையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருந்தது. மேலும் முதலாம் உலக யுத்த காலத்தில் பாவனைப் பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்தன.

அதற்கு முஸ்லிம் வியாபாரிகள்தான் காரணமெனவும் சிங்களவர் குற்ற உணர்வு கொண்டிருந்தனர். பௌத்தர்களின் ஆரவாரமான

வழிபாடு, ஊர்வலம் போன்றவற்றை முஸ்லிம்கள் விரும்பியிருக்கவில்லை. இவ்வாறு பொருளாதர மதக்காரணங்களின் சக்தி வாய்ந்த கலவை 1915 ஆம் ஆண்டு கலவரத்தைத் துண்டியது

1915, மே 28 ஆம் திகதி கண்டியில் தொடங்கிய கலவரம் கொழும்பு சிலாபம் என நகரங்களுக்கு பரவி, அது கிராமங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டது. இதனால் சிங்களவரும், இந்திய முஸ்லிம்களும் பரஸ்பர மோதல்களில் ஈடுபட்டுக்கொண்டனர். இக்கலவரம் 1915, யூன் 9ஆம் திகதி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

### கலவரத்தின் போக்கு

காலகாலமாக கண்டி பிராந்தியத்தில் பெரஹர ஊர்வலம் பிரச்சினைகள் இன்றி பௌத்தர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்தது. 1915 ஆம் ஆண்டு "உயர் நீதி மன்றம் குறிப்பிட்ட கம்பளை பள்ளி வாசல் வளாகத்தின் முன்னால், வாத்தியங்கள் முழங்க, ஊர்வலம் கொண்டு செல்லப்படுவதற்குத் தடை உத்தரவை வழங்கியிருந்தது. இத்தீர்ப்பினை கைக்கொள்ளுமாறு இந்திய முஸ்லிம்கள் பௌத்த சிங்களவர்களை வற்புறுத்தியிருந்தனர். 28, மே 1915 ஆம் ஆண்டு பெரஹரா நீதிமன்றத் தீர்ப்பினைக் கவனத்தில் கொள்ளாது முன்னெடுக்கப்பட்டது. இதற்குக் காவல் துறை அனுமதியளித்திருந்தது. பெரஹரா கண்டி காஸ்ட் ஹில் வீதியால் சென்று கொண்டிருந்தது. அப்போது நீதிமன்ற தீர்ப்பினைச் சுட்டிக்காட்டிய முஸ்லிம்கள், தங்கள் பள்ளிவாசலை கடந்து செல்லும் ஊர்வலத்தை எதிர்த்தனர். அதனால் பொலிசார் பெரஹராவைத் தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்பியிருந்தனர். ஆரம்பத்தில் பெரஹராவுக்கு ஆதரவு வழங்கியிருந்த பொலிசார், பின்னர் அவ்வூர்வலத்தை தடுத்திருந்தனர். இதனைத் தொடர்ந்து இந்திய முஸ்லிம்களின் கேலிகள், கிண்டல்கள் பெரும்பான்மை பௌத்தச் சிங்களவர்களை வன்முறைக்குள் தள்ளியது. குறித்த ஊர்வலம் நடைபெற்ற அன்று, நள்ளிரவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடங்கிற்று. பள்ளிவாசல் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனால் சில முஸ்லிம்களும் சிங்களவர்களும் காயப்பட்டனர். ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்கிய பொலிஸ் பரிசோதகர் (F.D. Coore) உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டனர் (E.W. Perera).

1915, மே 29 ஆம் திகதி சிங்களவரும் முஸ்லிம்களும் பரஸ்பரம் வன்முறைகளில் ஈடுபட்டனர். (Ali, Ameer, 2007:1-20). முதலில் கம்பளை நகரப்பகுதிகளில் காணப்பட்ட இந்திய முஸ்லிம்களின் கடைகள் பௌத்த சிங்களவர்களால் உடைக்கப்பட்டன. அதன் பின்னர் கொழும்பில் வைத்து 18 வயதான சிங்கள இளைஞன் ஒருவனை இந்திய முஸ்லிம்கள் சுட்டுக்கொண்டனர். கொலையாளி கைது செய்யப்படவில்லை. முதல் வெறித்தனமான இக்கொலை கலவரத்தை மேலும் விரிவாக்கியது (Ramanathan. P, 1916:9). நகரில் காணப்பட்ட கடைகள் இருதரப்பு வன்முறைக் கும்பல்களினாலும் உடைக்கப்பட்டன. கண்டியில் கலவரத்தைத் தடுக்க பொலிசார் நடவடிக்கை எடுத்தனர். விசேடமாக பிரித்தானிய இந்திய இராணுவம் கண்டிக்கு வரவழைக்கப்பட்டது. இலங்கையின் ஆளுநர் சேர் ரோபட் சாள்'மெர்,பொலிஸ்மா அதிபர் ஹேபர்ட் டோபிக்கின், இராணுவ தளபதி எச்.எச்.எல்.மல்கொல்ட் ஆகியோர் கலவரத்தளத்திற்கு விரைந்தனர் (Kanakarasa. A.P., 1984:102, Ali Ameer, 2007:1-20) கலவரம் கொழும்புக்குப் பரவிக்கொண்டதைத் தொடர்ந்து பல்வேறு படைப்பிரிவுகள் அங்கு கொண்டுச் செல்லப்பட்டன.

அடுத்து வந்த ஒன்பது நாட்களுள் கலகம் மத்திய, வடமேல், மேல், தெற்கு மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களுக்கும்

பரவிக்கொண்டது. யூன் 2 ஆம் திகதியன்று ஏக காலத்தில் 116 இடங்களில் கலகம் இடம்பெற்றது. மாத்தளை, வத்தேகம, கடுகன்னாவ, கம்பளை, ரம்புக்கனை, பாணந்றை, கொடபிட்டிய, அங்கரஸ்ஸ ஆகிய முஸ்லிம்கள் செறிந்து வாழும் இடங்களில் கலவரம் தீவீரமடைந்தது. சிறுபான்மையினத்தினராகிய முஸ்லிம்கள் பௌத்த சிங்களவர்களைத் தாக்கினர். இது கண்டு சிங்களவர்கள் முஸ்லிம்கள் மீது முரட்டுத்தனமான தாக்குதல்களைத் தொடுத்தனர். நகரங்களில் கலவரத்தை அடக்கிய போதிலும் கிராமங்களுக்கு பரவிய கலவரத்தை அடக்க ஆட்சியாளர்களினால் முடியவில்லை (E. W. Perera 915).

## இராணுவச் சட்டம் அமுல்படுத்தல்

கலவரம் விரிபட்டு, விஸ்வரூபம் எடுத்ததைத் தொடர்ந்து ஆளுநர் ரோபேட் சாள்ஸ்மெல் இராணுவச் சட்டத்தை (Martial Law) பிரகடனப்படுத்தினார் (2, யூன் 1915). இச்சட்டத்தைப் பயன்படுத்திச் சிங்கள மக்கள் மீது கடுமையான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதலுக்கு ஆங்கில அரசாங்கத்துக்கு எதிரான, சிங்களவரின் திட்டமிடப்பட்ட சதி வேலை என்ற தவறான புரிதல் “உயர்மட்ட நிர்வாகத்திடம் காணப்பட்டமை மற்றொரு காரணமாகும். சமகாலத்தில் முதலாம் உலக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரித்தானியா போரில் பெரும் பங்கு வகித்தது. அதனால் ஜேர்மனியின் தொடர்போடு கலகம் சிங்களவர்களினால் முன்னெடுக்கப்படுவதாகவும் பிரிட்டிஸ் நிர்வாகம் சந்தேகித்தது. நம்பியது. இராணுவ தளபதி மல்கம் கலகக்காரர்கள் என்று சந்தேகப்படும் எவரையும் சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு கட்டளையிட்டிருந்தார். இக்கட்டளையைப் பயன்படுத்திக் கடுமையான வன்முறை நடவடிக்கைகளின் ஊடாக கலகத்தை அடக்க இராணுவ தரப்பால் முடிந்தது. நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இரவு நேரங்களில் வீட்டு வரண்டோக்களில் படுத்தவர்கள் கூட கலகக்காரர்களாக கருதப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது (E. W. Perera 1915).

## ஆணைக்குழு நிறுவப்படல்

மேல் மகாண அரசாங்க அதிபர் ஜே.ஜி. ரேசர் கலவரம் தொடர்பில் விசாரிக்கவென ஆணையாளராக நியமிக்கப்பட்டார். அதேநேரம்பிரகேடியர் எச்.எச்.எல்.மல்கம் என்பவரினால், இரண்டு இராணுவ தளபதிகள் சிறப்பு ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் அரசமுகவர்களாக செயற்பட்டு, தண்டணைகள், அச்சுறுத்தல் ஊடாக கடுமையான முறையில் வன்முறை தொடர்பிலான நட்ட ஈட்டைப் பௌத்த சிங்களவர்களிடம் அறவிட்டிருந்தனர்.இவ்விசேட ஆணையாளர்கள் நேரடியாக சேத மதிப்பீட்டைப் பொது மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. மாறாக வன்செயலில் பிரதான பங்கெடுத்த முஸ்லிம்களிடம் இருந்து பெற்றுக்கொண்டனர். அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, சிங்களவவர்களிடமிருந்து நட்ட ஈட்டை அறவிட்டு முஸ்லிம்களுக்கு வழங்கினர். இவர்கள் இருவரும் தீர்மானித்த வன்செயல் நட்ட ஈட்டைச் செலுத்திய சிங்களவர்கள் மன்னிக்கப்பட்டு விடுதலை அளிக்கப்பட்டனர். செலுத்தத் தவறியவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுத் தண்டிணைக்கு உட்படுத்தப்பட்டனர். குறித்த வன்செயலில் முஸ்லிம்கள் மட்டும் இழப்புக்களைச் சந்தித்திருக்க முடியாது. வன்முறையில் ஈடுபட்ட, இரு தரப்புக்களுக்கும் இழப்புகள் ஏற்பட்டிருக்கும். அவ்விழப்புகளின் தாக்கத்தில் இருதரப்புகளுக்குமிடையே ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டிருக்கும். இந்த யதார்த்தத்தை கவனத்தில் கொள்ளாது ஆணையாளர்கள் ஒருபக்க தகவல்களை வைத்துக் கொண்டு, மனிதாபிமானம் அற்ற முறையில் சிங்களவர்ளிடம் மட்டும் நட்ட

ஈட்டை அறவிட்டு முஸ்லிம்களுக்கு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும் மாநாகர மேயர் R.W. பைட் தனது அதிகாரப் பிரதேசங்களில் வசித்த சிங்களவர்களின் சொத்துக்களுக்கு ஏற்ப வரிமதிப்பீடு செய்து, அறவிட்டு, முஸ்லிம்களுக்கு வழங்கினார் (E. W. Perera **1915**). கலவரத்தை தூண்டியவர்கள் எனக் குற்றம்" சாட்டப்பட்ட பலர், கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டனர். கம்பளை கடலாதெனிய விகாராதிபதி F.P. வல்கம்பாவே கைது செய்யப்பட்டு, கண்டிக்குப் பிணமாகக் கொண்டுவரப்பட்டார். சிங்களத் தலைவர்களின் வீடுகள் சோதனையிடப்பட்டு பலர் கைது செய்யப்பட்டனர். F.R. சேனாநாயக்க, D.S.சேனாநாயக்க, D.P. ஜயதிலக்க, W.A.D. சில்வா, F.R. டயஸ் பண்டாராநாயக்க, E.D.D. சில்வா, டொக்டர் கேசியஸ் பெரேரா, சி.பதுவன்டுடாவே, D.P.A விஜயவர்த்தனா போன்ற முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்னர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை மிரட்டி, கட்டாயப்படுத்தி, வன்செயல் நட்ட ஈட்டை அறவிட்டு, முஸ்லிம்களுக்கு வழங்கியிருந்தனர்.

இந்தக் கலவரக் காலத்தில், முதலாம் உலக யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த யுத்தத்தில் இங்கிலாந்தின் முக்கிய எதிரியாக ஜேர்மன் காணப்பட்டது. இலங்கையில் கலவரத்தில் ஈடுபட்ட கற்றோர் குழுவினர் (மத்திய தர வர்க்கம்) ஜேர்மன் ஆதரவாளரர்களாக சந்தேகிக்கப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது (Keraney:1970, Jeyawardena:1970, Balckton:1970).

**விளைவுகள்**

**1915** ஆம் ஆண்டு இனவன்முறை பற்றிய அறிக்கை ஜேம்ஸ் பீரிஸ் என்வரால் எழுதப்பட்டது. அவ்வறிக்கையை இராமநாதன் பிரித்தானிய அரசின் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்குச் சமர்பித்தார். அதனால் சில நடவடிககைகள் எடுக்கப்பட்டன. சம்பவத்தை விசாரிக்கும் பொருட்டு இலங்கையின் பிரதம நீதியரசர் சேர் அலெக்சாண்டர் வுட் ரெண்டர் தலைமையில் பொலிஸ் ஆணைக்குழு நிறுவப்பட்டது. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவில் சொலமன் அபயசேகரா என்ற சிங்களவரும் நியமிக்கப்பட்டாார். இக்குழுவின் அறிக்கை **1916** ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது (Dep Arthur. C 2021). ஆளுநர் ரோபேட் சால்மாஸ் துணை ஆளுநராகப் பதவி இறக்கப்பட்டு, அயர்லாந்துக்கு மாற்றப்பட்டார். படைத்தளபதி H.H.L. மல்கொம் மேற்கு ஜேர்மன் யுத்தக் களத்திற்கு மாற்றப்பட்டார். சிங்களர் மீது அடக்கு முறைகளைப் பிரயோகித்த பஞ்சாபிய படையணி மத்திய கிழக்கு - மொசப்படேமிய யுத்த களத்திற்குக் கொண்டுச் செல்லப்பட்டது.

இது ஒருபுறமிருக்க வன்முறை இழப்புகள் தொடர்பில் உறுதியான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டிய இழப்புகள் ஏற்றத்தாழ்வுகளை கொண்டதாக காணப்பட்டன. **25** மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டனர். **189** பேர் மரணம் மற்றும் **4** பாலியல் வன்கொடுமைகள் என்பனவும் காட்டப்பட்டுள்ளன. **4075** வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் கொள்ளையிடப்பட்டன. **250** வீடுகள் மற்றும் வியாபார நிலையங்கள் தீயூட்டப்பட்டன. **17** பள்ளி வாசல்கள், **86** முஸ்லிம் வழிபாட்டு நிலையங்கள் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டன. குறிப்பாக உத்தியோகப் பூர்வ அறிக்கைகளின் படி **116** கொலைச் சம்பவங்கள் பதியப்பட்டுள்ளன. கொலை செய்யப்பட்டவர்களுள் **63** பேர் இராணுவத்தால் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது (Tambiah:1992, Gunasinghe: 2004)

## முடிவுரை

இக்கலவரத்தின் பின்னர் ஆங்கிலம் கற்ற சிங்களத் தலைவர்கள் தோற்றம் பெற்றனர். இவர்கள் செல்வமும் கல்வியறிவும் கொண்ட மத்தியதர வர்க்கத்துடன் இணைந்து சுதந்திர இலங்கைக்கான எண்ணக்கருவை இலங்கையர்களுக்கு ஊட்டி தேசிய விடுதலையைப் பெற்றுக்கொடுக்கும் பணியை வென்றெடுப்பதற்குக் கலகம் அடியிட்டுக் கொடுத்திருந்தது. இக்கலவரத்தின் பின்னர் நாட்டில் சிறுபான்மையோர் மீதான வன்முறைகள் அதிகரித்துக்கொண்டன. இக்கலவரத்தின்போது தமிழர்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து முஸ்லிகளுக்கு எதிராகச் செயற்பட்டனர். அது நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் மேலும் அதிகரித்துக்கொண்டது. குறிப்பாகச் சிங்களப் பேரினச் சிங்கள ஆட்சியாளர்களுடன் முஸ்லிம்கள் சேர்ந்து தமிழர்களுக்கு எதிராக செயற்பட்ட வரலாறு தொடர்கின்றது. அவர்களின் அத்தகையச் செயற்பாடுகள் தமிழர்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## துணைநூற் பட்டியல்

1. முகமது சமீம். 1997. ஒரு *சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சனைகள்*. கொழும்பு